**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண்.4/2016**

**பி.வா.சா. –2– பாலமுருகன்**

**நாள். 21.03.2025**

**பி.வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த நீதிமன்றத்தில் சாட்சியம் வழங்க அழைப்பாணை எதுவும் வழங்கப்பட்டதா என்றால் இல்லை. 2,3 பிரதிவாதிகள் அழைத்தன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விலாசத்தில் நான் கடந்த 10 வருடமாக குடியிருந்து வருகிறேன். நான் சுமார் 4,5 வருடமாக அரிசி வியாபாரம் செய்தேன். 1992 ஆண்டு முதல் கச்சேரிதெருவில் அரிசி கடை 2002 வரை வைத்திருந்தேன். எனது உடன் பிறந்த சகோதரர் பத்திர எழுத்தராக இருந்ததால் அவருக்கு உதவியாக இருந்து வந்தேன். எனது சகோதரர் பெயர் அங்குராஜ். அவர் திண்டுக்கல் கிழக்கு கோவிந்தாபுரம், நேருஜி தெருவில், அருள்மிகு வெள்ளை விநாயகர் இல்லை என்ற முகவரியில் பத்திர எழுத்தராக இருந்து வருகிறார். 2 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் எனது சகோதரின் பத்திரம் எழுதும் அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து போவார் அந்த வகையில் எனக்கு 2 ஆம் பிரதிவாதியை தெரியும். 2 ஆம் பிரதிவாதியின் குடும்ப விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது முதல் விசாரணையில் 2 ஆம் பிரதிவாதியின் தகப்பனார் ஆறுமுக கவுண்டர் எங்களது பத்திர அலுவலத்திற்கு சில ஆவணங்கள் எழுதுவதற்காக வந்து செல்வதாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால், என்ன என்ன ஆவணங்கள் எழுத வந்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது சகோதரருக்கு மேற்படி பத்திர அலுவலகத்தை தவிர மற்றொரு பத்திர அலுவலகம் தாலுகா அலுவலகத்திற்கு அருகில் வைத்திருந்தார். தற்போது அவர் இறந்து 4 வருடம் ஆகிவிட்டது. உயில் சாசனம் டாங்கல் பேப்பரில் எழுதப்பட்டுள்ளது. மேற்படி உயில் சாசனத்தில் உள்ள வாசகங்கள் எனது சகோதரர் தயார் செய்துள்ளார். மேற்படி உயில் சாசனத்தில் முதலாவது சாட்சி கையொப்பம் செய்தவர் 2 ஆம் பிரதிவாதி கலையரசி ஆவார். அவர் தமிழில் கையொப்பம் செய்துள்ளார்களா அல்லது ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார்களா என்பது எனக்கு ஞாபகமில்லை. மேற்படி உயிலில் உள்ள சொத்தின் மதிப்பு உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் நான் எனது அண்ணனுக்கு உதவியாக வேண்டிய நபர் என்பதால் நான் சாட்சி கையொப்பம் செய்வேன். எனது முதல் விசாரணையில் சர்வே எண் அதன் விஸ்தீரனம் குறிப்பிட்டுள்ளேன் அது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் பார்த்தேனா என்றால் எனது சகோதரர் பார்த்தார்.

மேற்படி உயிலானது எந்த தேதியில் எழுதப்பட்டது என்றால் 2010 வருடம் 2 வது மாதம் 8 தேதி எழுதப்பட்டது. மேற்படி உயில் சாசனம் எழுதும் சமயத்தில் போது நானும், ஆறுமுக கவுண்டரும், கலையரசி மட்டுமே இருந்தோம். மேற்படி உயில் சாசனம் பதிவு செய்யும் போது ஆறுமுக கவுண்டர் தெளிந்த சிந்தனையோடு இல்லாததை பயன்படுத்தி 2 ஆம் பிரதிவாதி எனது உதவியுடன் உயில் சாசனம் எழுதி பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எனக்கும் 2 ஆம் பிரதிவாதிக்கும் எந்த அறிமுகம் இல்லாத நிலையில் 2 ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.03.21 17:39:09 +0530

Additional District Judge(FAC),

Dindigul.